**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATTUR.**

**C.C. No.802/2025.**

1. Deposition of Witness for : PW1
2. Name : பிரேம்குமார்.க
3. Father's Name : கணேசன்
4. Village : வேலூர்
5. Taluk : வேலூர்
7. Calling : உதவி இயக்குநர் – 2 தொழிக பாதுகாப்பு சுகாதாரம்
8. Religion :
9. Age : 31

Solemnly affirmed by Selvi.M.K.Anusha, M.L., Chief Judicial Magistrate, Tirupathur in accordance with the provision of Act X of 1873 of the day of 13.11.2025.

**எதிரி ஆஜர் இல்லை. மனுவின்பேரில் விலக்கு அளிக்கப்படுகிறது.**

முதல் விசாரணை:–

நான் தற்போது இரண்டாம் வட்டம் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் உதவி இயக்குநராக பொறுப்பு வகித்து வருகிறேன். திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் தாலுக்கா, குடியாத்தம் ரோடு, பெரியவரிகம், கதவு. எண்.162/1, Nibras Co., Leather Division, என்ற முகவரியில் இயங்கும் தொழிற்சாலை மீது 06.05.2025 அன்று புகார் கடிதம் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்–II அலுவலகத்தில் பெறப்பட்டது. அந்த புகார் கடிதம் நகல் **ம.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரின்

அடிப்படையில் தற்போதைய தொழிக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் இரண்டாம் வட்டம் உதவி இயக்குநர் ஆகிய நான் 07.05.2025 அன்று மேற்கண்ட தொழிற்சாலையில் புகார் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வறிக்கை தயார் செய்யப்பட்டது. மேற்படி ஆவணம் **மத.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திரு.M.S.Khaleel Lur Rahman (Age 60) S/o. M.Showkath Ali என்பவர் தொழிற்சாலைகள் சட்டம் 1948 படிவம் 2ன் படி தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளர் ஆவார். படிவம் 2 **மத.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வின் அடிப்படையில் காணப்பட்ட முரண்பாடுகளுக்கு தொழிற்சாலையின் சட்டத்தின் கீழ் தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளருக்கு 14.05.2025 அன்று உதவி இயக்குநர் ஆகிய என்னால் காரணம் கோரும் அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி காரணம் கோரும் அறிக்கை **மத.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காரணம் கோரும் அறிவிப்பு கொண்ட தொழிற்சாலை உரிமையாளர் மற்றும் மேலாளரிடமிருந்து ஒப்புதல் அட்டை நகல் 19.05.2025 அன்று பெறப்பட்டது. ஒப்புதல் அட்டை **மத.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 25.06.2025 அன்று காரணம் கோரும் அறிக்கைக்கு திருத்த சீட்டு வழங்கப்பட்டது. அந்த திருத்த சீட்டு **மத.சா.ஆ.6** ஆக குறயீடு செய்யப்படுகிறது. காரணம் கோரும் அறிவிப்பு பெற்றுக்கொண்டு தொழிற்சாலை உரிமையாளர் மற்றும் மேலாளரிடமிருந்து பதில் கடிதம் எதுவும் பெறப்படவில்லை. எனவே மேற்கண்ட முரண்பாடுகள் மீது மேல் நடவடிக்கை தொடரப்போகிறது என்று 04.07.2025 அன்று மேல்நடவடிக்கை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது. மேல்நடவடிக்கை கடிதம் நகல் **மத.சா.ஆ.7**

ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது குறித்து வழக்கு முன்மொழிவு பேரரணை 04.07.2025 அன்று சேலம் தொழிலக பாதுகாப்பு சுகாதாரம் கூடுதல் இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. முன்மொழிவு பேரரணை **ம.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனை தொடர்ந்து மேற்கண்ட தொழிற்சாலையின் உரிமையாளர் மற்றும் மேலாளர் மீது வழக்கு தொடர வழக்கு அனுமதி தொழிலக பாதுகாப்பு சுகாதார 2ம் வட்டம் இணை இயக்குநர் அலுவலகத்திற்கு 18.07.2025 அன்று பெறப்பட்டது. அனுமதி கடிதம் **ம.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த அனுமதி கடிதம் பெறப்பட்டதின் அடிப்படையில் திருப்பத்தூர் மேன்மை தங்கிய தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் உதவி இயக்குநர் 2, தொழிலக பாதுகாப்பு சுகாதாரம் அவர்களால் கீழ்கண்ட குற்ற முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

**முரண்பாடு–1**

சம்பளப் பட்டுவாடா சட்டம் 1936 மற்றும் தமிழ்நாடு சம்பளப் பட்டுவாடா விதிகள் 1937 பிரிவு 3(1)(a) மற்றும் 5(1)(a) படி ஆயிரத்திற்கும் குறைவான தொழிலாளர்கள் பணிப்புரியும் தொழிற்சாலையில் பணிப்புரியும் ஒப்பந்த தொழிலாளர் உட்பட அனைத்து வகை தொழிலாளருக்கும் பிரதி மாத சம்பளம் சம்பள காலம் முடிந்து ஏழு நாட்களுக்குள் வழங்கப்படவேண்டம். ஆனால் எதிரி தொழிற்சாலையில் Security ஆக பணிப்புரிந்த திரு.சமுவேல் த/பெ.முனிசாமி எனபவருக்கு 01.01.2025 முதல் 05.03.2025 வரையிலான காலத்திற்கு சம்பளம் ஆய்வு நாள் வரை வழங்கவில்லை என்பது தெரியவந்தது. இது பிரிவு 3(1)(a) மற்றும் 5(1)(a) படி கடும் முரணாகும்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>** **இல்லை.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

M K ANUSHA

Chief Judicial Magistrate
Digitally signed by M K ANUSHA
DN: cn=M K ANUSHA, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: Tirupathur
Date: 2025.11.13 17:40:16 +0530

Chief Judicial Magistrate,
Tirupathur.